**தலைப்பு 189- பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 189 - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11 (2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஜுலை 08 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதானகணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோக்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்படுகிறேன்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமைகள்**

2023 திசெம்பர் 30 திகதிய இலக்கம் 05/2023 கொண்ட கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதும், அந்த தேவைப்பாடுகளிற்கு மாற்றமாக சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2024 மார்ச் 25 திகதிய 01/04/16/JLO/2023 இலக்க சிரேஷ்ட உதவி செயலாளரின் (நிர்வாகம்) கடிதம் பிரகாரம் மீளாய்வாண்டினுள் அமைச்சிற்குரிய 04 வாகனங்கள் 05 சந்தர்ப்பங்களில் விபத்திற்குள்ளாகியுள்ளதுடன், அது தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு I மற்றும் இணைப்பு II இனுள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்வதுடன், தவறுதாலாக இந்த வாகன விபத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட தவறியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய வழிகாட்டி பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் இணைப்பு I மற்றும் II இனுள் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) ஆதன, பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதன, பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 திகதி கட்டிடங்கள் மற்றும் நிர்மாண நடைமுறை வேலைகள் மீதி ரூபா 677,991,054 ஆன போதும், 2023 சனவரி 01 திகதியன்று அதனை ரூபா 732,237,046 ஆக காண்பித்த காரணத்தால் SA - 82 இல் ஆரம்ப மீதி ரூபா 54,245,992 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022.12.31 இல் உள்ளவாறு நிலவிய நடைமுறை வேலைகளிற்கு இடையே நடைமுறை ஆண்டில் மேற்கொண்டுள்ள ரூபா 52,410,795 பெறுமதி திறைசேரி பொழிப்பில் தொழிநுட்ப தவறொன்றின் காரணமாக ஆரம்ப மீதியுடன் சேர்ந்துள்ளது. ரூபா 1,835,195 ஆன 3810 இலக்க வவுசரை சொத்தாக அறிக்கையிடும் போது தொழிநுட்ப தவறின் மீது இரு முறை குறிபிப்பிடப்பட்டு ஆரம்ப மீதியுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆண்டின் இறுதி மீதி ரூபா 1,835,195 கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதனை சரிசெய்வதற்காக 2024 ஆண்டில் ஜர்னர் குறிப்பிட நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டு ஏற்பாட்டின் மூலம் செய்யப்பட்ட நிர்மாணங்களை ஆரம்ப மீதியுடன் செம்மையாக்க முடியாது. |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 2,724,696,879 ஆன போதும், 2023 சனவரி 01 திகதியன்று அது ரூபா 2,831,925,861 ஆக காண்பித்த காரணத்தால் SA - 82 இல் ஆரம்ப மீதி ரூபா 107,228,982 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சிகாஸ் மென்பொருளினுள் காணப்படும் தொழிநுட்ப பிரச்சினை 2022 இறுதிக் கணக்கு சமர்ப்பிக்கும் போது இவ்வாறே காணப்பட்டதுடன், அதனை திறைசேரிக்கு எழுத்து மூலம் மற்றும் வாக்கு மூலம் அறிவித்துள்ள போதும், இது வரை சரிசெய்ய தேவையான அறிவுறை வழங்கப்படாத காரணத்தால் இந்த வித்தியாசம் பிரதிபலிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டு ஏற்பாட்டின் மூலம் பெற்றுக் கொண்ட சொத்துக்கள் பெறுமானம் ஆரம்ப மீதிக்கு செம்மையாக்க முடியாது. |
| (iii) | நிதியல்லா சொத்து தொடர்பான கூற்றின் (ACA-6) பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியன்று நிதியல்லா சொத்துக்களின் மொத்த பெறுமதி ரூபா 8,646,567,158 ஆன போதும், அத் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதன, பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 8,923,747,158 ஆக குறிப்பிட்டுள்ள காரணத்தால், நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதியல்லாத சொத்து ரூபா | ACA-6 இல் காண்பித்துள்ள நிதியல்லா சொத்து பெறுமதியான ரூபா 8,646,567,158 சரியான நிதியல்லாத சொத்து பெறுமதியாவதுடன், நிதி நிலைமை கூற்றிற்கு மீதியை கொண்டு செல்லும் போது அச்சு தவறொன்று இடம்பெற்றுள்ளதாக அறிவிப்பதுடன், 2024 நிதிக்கூற்று தயாரிக்கும் போது இதனை கவனத்திற் கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதி நிலைமை கூற்றிற்றிற்கு மீதியை கொண்டு செல்லும் போது சரியான பெறுமானத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 277,180,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் சொத்து சுவீகரிப்பிற்காக ரூபா 237,371,259 செலவிட்டுள்ள போதும், நிதிச் சொத்துக்கள் கூற்றில (ACA-6) கொள்வனவாக ரூபா 77,731,482 காண்பித்துள்ள காரணத்தால், ஆண்டினுள் கொள்வனவு ரூபா 159,639,777 தொகை நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டிற்கான அனைத்து சொத்து சுவீகரிப்புக்களும் புதிய சிகாஸ் மென்பொருளினுள் தரவேற்றம் (Upload) செய்யப்பட்டு உள்ளதுடன், இந்த சிகாஸ் மென்பொருளினுள் உள்ள தொழிநுட்ப பிரச்சினை 2022 இறுதி கணக்குகளை சமர்ப்பிக்கும் போதும் இவ்வாறே காணப்பட்டதுடன், அதனை திறைசேரிக்கு எழுத்து மூலம் மற்றும் வாக்கு மூலம் அறிவித்துள்ள போதும் இது வரை சரிசெய்ய தேவையான அறிவுறை வழங்கப்படாத காரணத்தால் இந்த வித்தியாசம் பிரதிபலிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொழிநுட்பத் தவறை விரைவில் தீர்த்து சரியான பெறுமானங்களை நிதிக்கூற்றில் காண்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகள்** | | |
| நிதிப்பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து பொறுப்புக்களும் சிகாஸ் கணக்கீட்டு உள்ளடக்கத்திற்கு உள்ளிடப்படுவதுடன், அதன் மூலம் காசு காணப்படுவதெனவும் உரியவாறு பட்டியல்கள் கிடைப்பதெனவும், அப் பட்டியல்களிற்கு தாமதமின்றி கொடுப்பனவு செய்யப்படுதனெவும் கணக்காளரினால் தொடர்சியாக பரீட்சிக்கப்படுகின்றது. அவ்வாறாயினும் எதிர்காலத்தில் பொறுப்புக்கள் பதிவேடொன்றை வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புக்கள் தினந்தோரும் பரீட்சிக்கக் கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடொன்றில் அப் பொறுக்புக்கள் குறிப்பிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கான பாதீட்டு மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 12,222,000,000 ஆன போதும், நிகழ்சித் திட்டம் பிரகாரம் செலவின பொழிப்பில் (ACA-2) மீண்டுவரும் செலவினத்திற்காக மதிப்பிடப்பட்ட பாதீட்டு ஏற்பாடு ரூபா 12,221,000,000 என காட்டியுள்ள காரணத்தால் ரூபா 1,000,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | விஷேட அதிரடிப்படை (கருத்திட்டம் 03) இற்கு 189-01-03-0-1508 ஏனைய மாற்றலின் கீழ் ரூபா 1,000,000 ஆன ஏற்பாடு கிடைத்துள்ளதுடன், அது ACA-2(ii) இன் கீழ் சரியாக காட்டப்பட்டுள்ள போதும், ACA-2 இற்கு ஏற்பாடு பொழிப்பு செய்கையில் இந்த ஏற்பாட்டு அளவு MS excel மூலம் அனுப்புகையில் விடுபட்டுள்ள காரணத்தால் ACA-2 காண்பித்துள்ள தேறிய ஏற்பாடும் ரூபா 1,000,000 இனால் வித்தியாசத்தை பிரதிபலிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சரியான பெறுமானங்களை உள்ளீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திறைசேரி அச்சு குறிப்பு (SA-10) பிரகாரம் மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 13,743,734,872 ஆன போதும், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகழ்சித திட்டம் பிரகாரம் செலவின பொழிப்பில் (ACA-2) மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 13,742,734,872 என காட்டியுள்ள காரணத்தால் ரூபா 1,000,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | விஷேட அதிரடிப்படை (கருத்திட்டம் 03) இற்கு 189-01-03-0-1508 ஏனைய மாற்றலின் கீழ் ரூபா 1,000,000 ஆன ஏற்பாடு கிடைத்துள்ளதுடன், அது ACA-2(ii) இன் கீழ் சரியாக காட்டப்பட்டுள்ள போதும், ACA-2 இற்கு ஏற்பாடு பொழிப்பு செய்கையில் இந்த ஏற்பாட்டு அளவு MS excel மூலம் அனுப்புகையில் விடுபட்டுள்ள காரணத்தால் ACA-2 காண்பித்துள்ள தேறிய ஏற்பாடும் ரூபா 1,000,000 இனால் வித்தியாசத்தை பிரதிபலிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சரியான பெறுமானங்களை உள்ளீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீண்டுவரும் 03 செலவின விடயங்களிற்கான ஏற்பாடு ரூபா 2,000,000 தொகை மற்றும் மூலதன செலவின விடயமொன்றிற்கான ஏற்பாடு ரூபா 500,000 ஆன மொத்த ஏற்பாடும் எஞ்சியிருந்தன. | 189-1-1-0-1203 அமைச்சு பதிவியணியினரிற்கு அரச சேவையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்படாததால், சீருடை படிகள் வழங்கப்படாததால், 189-1-1-0-1506 அமைச்சு பதிவியணியினரிற்கு அரச ஊழியர்களிற்கு வழங்கும் ஆதன கடன் பெற்றுக் கொண்ட அரச ஊழியர்கள் நியமிக்கப்படாததால், 189-1-3-0-1508 விஷேட அதிரடிப்படை அலுவலர்களிற்கு | உச்ச வினைத்திறனுடன் ஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இழப்பீடு செலுத்துவதற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்படாததால், 189-1-1-0-2002 ஒழுங்கான பராமரிப்பு காரணமாக இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களிற்காக மூலதன தன்மையிலான திருத்தங்கள் ஏற்படாததாலும் மீதிகள் காண்பிக்கப்படுவதுடன், 2024 பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது இவைகள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. | |
| (ஈ) | செலவின விடயங்கள் 18 இற்காக வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 1,504,550,000 ஆன ஏற்பாட்டில் ரூபா 770,880,831 தொகை எஞ்சியிருந்துடன், அம் மீதி 35 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சளவை கொண்டிருந்தது. | 2023 ஆண்டிற்காக ஒதுக்கிய மீண்டுவரும் ஏற்பாடு 6 சதவீதத்தால் பதிவழிக்கப்பட்டமை மற்றும் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மூலம் செலவின முகாமைத்துவத்திற்கு அறிவுரை வழங்கியுள்ளதால், அத்தியசஷிய செலவினை மேற்கொண்டதனால் மற்றும் வி.அ.ப. இற்கு தோட்டாகளை பெற்றுக் கொள்ள திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தில் வழங்கல் காலம் நீடிக்கப்பட்டமை, சமாதான பொலிஸ் படையணி தோட்டாகளை கொள்வனவு செய்ய விடப்பட்ட கட்டளை ஐக்கிய நாடுகள் சங்கத்தின் அங்கீகாரம் கிடைக்காதமை மற்றும் தோட்டாகளையின் ஆயுட் காலம் 5 ஆண்டுகள் ஆகையால் தற்காலிக இடைநிறுத்தம் மற்றும் இரண்டு ஜீப் வண்டிகளை கொள்வனவு செய்தல் நிறுத்தப்பட்டமை காரணமாக ரூபா 291 மில்லியன் ஏற்பாடு எஞ்சியமை மற்றும் விஷேட அதிரடிப் படைக்காக 2023.12.31 திகதியன்று நிலவிய பட்டியல்களை தீர்க்க போதிய முற்பணம் கிடைக்காததன் மீது ரூபா 321 மில்லியனான பொறுப்புக்கள் காணப்பட்டமை இந்த சேமிப்பிற்கு காரணமானதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | உச்ச வினைத்திறனுடன் ஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் 13 செலவின விடயங்களிற்காக நி.பி. 66/69 இன் கீழ் ரூபா 326,400,000 ஆன ஏற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன், அந்த மாற்றல்கள் மதிப்பீட்டின் சதவீதமாக 26 சதவீதம் முதல் 4920 சதவீதம் வரையான வீச்சளவை கொண்டிருந்தது. | ஆள் அடையாளம் தொடர்பான பொது செயலகம் (சுஹுருபாய கட்டடிடம்) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஒப்படைக்கப்பட்டதுடன் அமைச்சு மாடி 17 மற்றும் 18 இற்கு கொண்டு செல்லப்பட்ட காரணத்தால் அத்தியவஷிய அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யவும், | வருடாந்த மதிப்பீட்டை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அத்தியவஷிய செலவுகளை மேற்கொள்ளவும் ஏற்பாடு போதாத சந்தர்ப்பத்தில் நி.பி. 66 ஊடாக தேவையான ஏற்பாட்டை பெற்றுக் கொண்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | விஷேட அதிரடிப் படையின் செலவு விடய இலக்கம் 189-1-3-0-1303 கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு செலவிற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 50,000,000 ஆன ஏற்பாடு ஒதுக்கிக் கொண்டுள்ள போதும், அதில் ரூபா 5,000,000 தொகை அதாவது 10 சதவீதம் நி.பி. 66/69 கீழ் அமைச்சு அலுவலக செலவு விடய இலக்கம் 189-1-1-0-1301 வாகன பராமரிப்பு செலவிற்கு மாற்றப்பட்டிருந்தது. | கௌரவ அமைச்சர் மற்றும் பதவியணியினர்களுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் 10 ஆண்டுகளை விஞ்சியவை என்பதால், பராமரிப்பு செலவுகள் மற்றும் அத்தியஷிய திருத்த செலவுகள் அதிகரித்தமை, பருவ சேவைகள அதிகரித்மை காரணமாக, 2023 ஆண்டிற்காக வழங்கியிருந்த ஏற்பாடு போதாமையானதுடன், நி.பி. 66 ஊடாக ரூபா 5,000,000 தொகை மேலதிக ஏற்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.<br>கௌரவ அமைச்சர் மற்றும் பதவியணியினர்களுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் 10 ஆண்டுகளை விஞ்சியவை என்பதால், பராமரிப்பு செலவுகள் மற்றும் அத்தியாவசிய பழுதுபார்ப்பு செலவுகள் அதிகரிப்பு, பருவகால சேவைகள் அதிகரிப்பு காரணமாக, 2023 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடு போதுமானதாக இல்லை, மேலும் எம்.ஆர். 66 கூடுதல் ஒதுக்கீடு ரூ.5,000,000 மாற்றப்பட்டது. | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது எதிர்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனித்தல் வேண்டும். |
| (எ) | விஷேட அதிரடிப் படையின் செலவு விடய இலக்கம் 189-1-3-0-1203 கீழ் உணவு மற்றும் சீருடைக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 270,000,000 ஆன ஏற்பாடு ஒதுக்கிக் கொண்டுள்ள போதும், அதில் ரூபா 13,000,000 தொகை அமைச்சு நிருவாக மற்றும் நிறுவன சேவை கருத்திட்டத்திற்காகவும், ரூபா 57,800,000 தொகை விஷேட அதிரடிப்படை கருத்திட்டத்தின் ஏனைய 04 செலவின விடயங்களிற்காகவும் நி.பி. 66/69 கீழ் மாற்றப்பட்டிருந்ததுடன், அவ்வாறு மாற்றப்பட்ட பெறுமதியான ரூபா 70,800,000 தொகை, விஷேட அதிரடிப் | 2102 – பொது மக்கள் பாதுகாப்வு அமைச்சினை சுஹுருபாய கட்டிடத்திலிருந்து மாடி 17 மற்றும் 18 இல் இஸ்தாபிக்கும் நடவடிக்கைக்காக ரூபா 13,000,000 தொகையும், 1301 - இந்திய கடன் உத்தேச திட்டத்தின் கீழ் வழங்கியுள்ள வாகனங்களிற்கான பராமரிப்பு கொடுப்பனவிற்காகவும் மேலதிக ஏற்பாட்டு அளவு 1403 – திறைசேரியினால் மொத்த ஏற்பாட்டையும் வழங்காமை மற்றும் நீர் மற்றும் மின் பட்டியல் அதிகரித்தமையாலும், 2102 – மதிப்பிடப்படாத புதிய பெறுகையாக ஜயவர்தனபுர முகாம் நவீனமயமாக்கல் | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது எதிர்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | படையின் உணவு மற்றும் சீருடைக்காக மீளாய்வாண்டிற்கு ஏற்பாட்டுத் தொகையின் 26 சதவீதமாகும். | நடடிவக்கைகளிற்கு தேவையான தளபாடங்களை கொள்வனவு செய்யவும், 2104 – வி.அ.ப. இன் களபலுவாவ மற்றும் வதுகொளகந்த ஆகிய புதிய நிர்மாண கருத்திட்டங்களின் பட்டியல்களை தீர்ப்பதற்காகவும் நி.பி. 66 கீழ் ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | விஷேட அதிரடிப் படையின் செலவு விடய இலக்கம் 189-1-3-0-1205 கீழ் ஏனையவற்றிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 550,000,000 ஆன ஏற்பாடு ஒதுக்கிக் கொண்டுள்ள போதும், அக் கருத்திட்டத்தின் 10 செலவின விடயங்களிறட்காக ரூபா 244,575,000 தொகை அதாவது 44 சதவீதம் நி.பி. 66/69 மூலம் மாற்றப்பட்டிருந்தது. | ஏற்பாடு போதாதான் மீது 1302 - இயந்திர உபகரணங்கள் திருத்த வேலைகளிற்கும் 1402 – தபால் மற்றும் தொலை தொடர்பு செலவு அதிகரித்தமையாளும், 1403 - நீர் மற்றும் மின் பட்டியல் அதிகரித்தமையாலும், 1404 – வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட கட்டிடத்திற்கு வாடகை செலுத்தவும், 1204 மருத்துவ வழங்களிற்காகவும், 1302 - இயந்திர உபகரணங்கள் திருத்த வேலைகளிற்காகவும், 1401 - வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வாகனங்களிற்கு இந்த செலவு மதிப்பீடு செய்யப்படாத புதிய பெறுகையாக ஜயவர்தன முகாம் நவீனமாக்கள் நடவடிக்கைக்கு தேவையான தளபாடங்களை கொள்வனவு செய்ய நேர்ந்தமை, 2103 – வி.அ.ப. இனால் பயன்படுத்தும் தொலைத் தொடர்புத் தொகுதியை சிறந்த வினைத்திறனாக்க வழங்கல் நிறுவனத்திற்கு பணம் செலுத்த தேவைப்பட்டமை, 1102 இராஜ தந்திர பாதுகாப்பு அத்தியசஷிய பயிற்சி மற்றும் மதியுரை நடவடிக்கைகளிற்கான வெளிநாட்டு பிரயாணங்களிற்கு கொடுப்பனவு செய்யததன் மீது மேலதிக ஏற்பாடு நி.பி. 66 கீழ் ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது எதிர்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனித்தல் வேண்டும். |
| (ஐ) | விஷேட அதிரடிப் படையின் கருத்திட்டத்தின் செலவு விடய இலக்கம் 189-1-3-0-1409 (ஏனைய) இற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 20,000,000 ஆன ஏற்பாடு ஒதுக்கிக் கொண்டுள்ள போதும், அவற்றில் ரூபா 4,000,000 தொகை அதாவது | இராஜ தந்திர பாதுகாப்பு கடமை அத்தியவசிய பயிற்சி மற்றும் மதியுரை செயற்பாடுகளிற்கான வெளிநாட்டு பிரயாணங்களில் ஈடுபதலிற்கு கொடுப்பனவு செய்ய ஏற்பாடு போதியதாக இல்லாததன் மீது மேலதிக ஏற்பாடு நி.பி. 66 | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது எதிர்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 20 சதவீதம் அக் கருத்திட்டத்தினுடைய செலவின விடயம் 189-1-3-0-1102 (வெளிநாட்டு பிரயாணம்) இற்கு நி.பி. 66/69 மூலம் மாற்றப்பட்டிருந்தது. | கீழ் ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது | |
| (ஒ) | அமைச்சின் 07 செலவின விடயங்களிற்கான மதிப்பீட்டு ஏற்பாட்டின் மொத்தம் ரூபா 195,750,000 ஆனதுடன், ஆண்டினுள் நி.பி. 66 மற்றும் குறைநிரப்புதல் மூலம் ரூபா 486,209,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நி.பி. 66 மற்றும் குறைநிரப்புதல் மூலம் பெற்றுக் கொண்ட ஏற்பாடு ரூபா 290,459,000 ஆனதுடன், அது ஆரம்ப செலவின மதிப்பீட்டின் சதவீதமாக 104 முதல் 4920 ஆன வீச்சளவில் நிலவியதால் மதிப்பீடு தயாரித்தல் சரியான ஆய்வொன்றுடன் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஆள் அடையாளம் தொடர்பான பொது செயலகம் (சுஹுருபாய கட்டடிடம்) மக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உட்படுத்தப்பட்டதுடன் அமைச்சு மாடி 17 மற்றும் 18 இற்கு கொண்டு செல்லப்பட்ட காரணத்தால் அத்தியவசிய அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யவும், வருடாந்த ஒதுக்கீட்டு அதிகார சட்டம் மூலம் ஏற்பாட்டை மாற்றிக் கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும், அத்தியவசிய செலவுகளை மேற்கொள்ள ஏற்பாடு போதியதாக இல்லாத போது நி.பி. 66 மூலம் தேவையான ஏற்பாட்டை பெற்றுக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது எதிர்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனித்தல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 30 திகதிய இலக்கம் 05/2023 கொண்ட அரச கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் 3.3 பந்தி மற்றும் நி.பி. 94 பிரகாரம் உட்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கட்ப்பாடுகள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும், 31 செலவின விடயங்களிற்கு உரியதாக 2023 திசெம்பர் 31 திகதி உட்பட்டிருந்த கட்ப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 11,977,207 தொகை பொறுப்புக்கள் மற்றும் கட்ப்பாடுகள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 94 (2) பிரகாரம் மீண்டெழும் செலவுகளிற்காக எதிர்வரும் நிதியாண்டில் தீர்க்கும் எதிர்பார்ப்பில் பொறுப்பொன்றிற்கு கடப்பட முடியுமான போதும், நடைமுறை நதியாண்டின் மதிப்பீட்டினுள் ஏற்பாடு போதாததன் மீது சிகாஸ் உள்ளடக்கம் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. | 2023 நவம்பர் 30 திகதிய இலக்கம் 05/2023 கொண்ட அரச கணக்குகள் திணைக்கள வழிகாட்டியின் 3.3 பந்தி மற்றும் நி.பி. 94 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டியிருந்த போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை ஆக்கபூர்வமாக நடாத்திச் செல்ல தேவையான மாற்றங்களை செய்ய வேண்டுமெனவும், அம் மீளாய்வாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொண்டதற்கான கூற்று கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை தயாரித்து பேணிச் செல்வதெனவும், அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வதெனவும், அதன் பிரகாரம் தொகுதியில் மாற்றங்களை செய்யதெனவும் 2022 நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-பீ ஊடாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வு மாதிரி பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| **அவதானிப்பு** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 2017 ஜுன் 28 திகதிய 01/2017 இலக்க சுற்றறிக்கையின் 07 பந்தி | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் பராதீனம் செய்யப்பட்ட வாகனங்கள் தவிர ஏனை சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ரோளர் ஜனரால் அலுவலத்திற்கு அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை. | கொம்ரோளர் ஜனரால் திணைக்களத்தின் மூலம் NFAMS தொகுதியை இயக்குவது தொடர்பாக வழங்கிய அறிவுரை பிரகாரம் 2023 ஆண்டின் வாகனங்களின் தகவல்களை மாத்திரம் | 2017 ஜுன் 28 திகதிய 01/2017 இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 பந்தி பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | NFAMS தொகுதியிற்கு தரவேற்றம் செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. அதனால் ஏனைய சொத்துக்களிற்குரிய கொள்வனவு மற்றும் புதிய பராதீனம் செய்தல் அறிக்கை இடப்படவில்லை. 2023 ஆண்டில் நிகழ் நிலை முறையில் NFAMS தொகுதியை செயற்படுத்த ஆரம்பித்துள்ளதால் வி.அ.ப. வாகனங்கள் தவிர ஏனைய சொத்துக்களிற்குரிய தகவல்களை 01/2017 சுற்றறிக்கை பிரகாரம் கொம்ரோளர் ஜனரால் திணைக்களத்திற்கு அறிக்கையாக அனுப்புதல் மேற்கொள்ளவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை கருத்திட்டம்** | | |
| சுஹுருபாய கட்டிடத்தின் 10 ஆம் மாடியின் ஒரு நிலப் பகுதியில் மாத்திரம் கருத்திட்ட முகாமைத்துவ அலகை நடாத்திச் சென்ற போதும் 10 ஆம் மாடி மற்றும் 8 ஆம் மாடியின் நிலப் பகுதியொன்றிற்கும் கருத்திட்ட நிதியிலிருந்து நீர் மற்றும் மின் பட்டியல் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆண்டிற்காக கருத்திட்ட அலுவலகத்திற்கு உரித்தற்ற இரண்டு நிலப் பகுதிகளிற்கு ரூபா 16,662,198 ஆன மின் கட்டணம் மற்றும் ரூபா 1,030,913 நீர் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் மின் கட்டண நிலுவை வட்டியாக ரூபா 107,811 தொகையையும் கருத்திட்ட அலகினால் செலுத்தியுள்ளதாக | இலத்திரனியல் தேசிய ஆள் அடையாள அட்டை கருத்திட்டத்தினால் பொது மக்களின் தரவுகளை திரட்டலை ஆரம்பித்து அத் தரவுகளை பாதுகாத்துக் கொள்ளவதற்காக கணனி சர்வர் தொகுதியை பொருத்தி கணனி தரவுத் நிலையத்தை சுஹுருபாய கட்டிடத்தின் 08 ஆம் மாடியில் நிருவியுள்ளதாலும், 10 ஆம் மாடியில் B முனையத்தின் கருத்திட்ட அலுவலகத்தையும் C முனையத்தின் ஒரு பகுதியில் கருத்திட்டத்திற்கு உரிய கேட்போர் கூடத்தையும் நடாத்திச் செல்வதனாலும், ஆரம்ப சந்தர்ப்பத்தில் 10 ஆம் | நீர் மற்றும் மின் பட்டியல் செலுத்தும் போது இலத்திரனியல் அடையாள அட்டை கருத்திட்டத்திற்குரிய நிலப் பகுதிக்கு மற்றும் குறித்த பட்டியல்களை உரிய திகதியில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. | மாடியை சம்பூரணமாக பயன்படுத்த திட்டமிட்டிருந்ததாலும், மின் மற்றும் நீர் பட்டியல் செலுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஆ.ப.தி. ஆனையாளருடன் கலந்துரையாடி இச் செலவுகளை மேலும் முறையாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். உரிய திகதியில் முற்பணம் கிடைக்காத காரணத்தால் மின் பட்டியல்களிற்கு நிலுவை வட்டி செலுத்த நேரிட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் உரிய திகதிகளில் முறபணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களை அறிவூட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்காக (Formed Police Unit) விஷேட அதிரடிப்படை அலுவலர்களை ஈடுபடுத்துவது தொடர்பான திட்டம்.**<br><br>இலக்கம் அ.ப/16/0738/703/083 கொண்ட 2016 மே 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிக்காக விஷேட அதிரடிப்படையின் போராளிப் படைப் பிரிவொன்றை மாலி தேசத்தில் நிறுவுவதற்கு தேவையான ஆயுதங்கள், உள்ளிட்ட ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1590 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அத்தொகை போதாததன் மீது 2017 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய | இக் கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், அன்றிலிருந்து இன்று வரை கருத்திட்டத்திற்காக ஒருக்கப்பட்ட ரூபா 2765 மில்லியன் ஏற்பாடின் மூலம் ரூபா 1936 மில்லியன் செலவிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதல் பதிவேட்டின் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் கடமைகளில் பயன்படுத்த தேவையான வாகனங்கள் மற்றும் ஏனைய உதிரப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.<br>2022.09.07 முதல் 2022.09.10 திகதி வரை நடத்தப்பட்ட இறுதி பரீட்சையின் பின்னர் 2022.10.27 அன்று விஷேட அதிரடிப்படை அமைதி காக்கும் பொலிஸ் படையணி UN Peacekeeping Capability Readiness System (PCRS) நிலை 3 இல் நிறுவப்பட | எதிர்பார்த்த நோக்கங்களை தாமதமின்றி அடைந்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

அமைச்சரவை தீர்மான இலக்கம் அ.ப/17/1811/784/001-1 இன் கீழ் மேலும் ரூபா 1175 மில்லியன் தொகைக்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ரூபா 1,872,800,823 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படாததால் இக்கருத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கு எதிர்பார்க்கப்படும் அந்நியச் செலாவணியை அதிகரித்துக் கொள்ளல், இந்த அலகில் கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிற்கு மேலதிக வருமானம் கிடைத்தல் இலங்கை பொலிஸ் விஷேட அதிரடிப்படையிற்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல், பங்குபற்றும் அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச ரீதியாக அனுபவத்தைப் பெறுதல், விஷேட அதிரடிப்படையின் தகுதிவாய்ந்த அலுவலர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதன மூலம் ஊக்குவித்தல் போன்ற நோக்கங்கள் அடையப் பெற்றிருக்கவில்லை.

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளிற்கு கொண்டு செல்ல கொள்வனவு செய்த 57 வாகனங்கள் 03 டேலர்கள் மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக சுமார் ரூபா 1873 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

அமைதி காக்கும் பணிகளுக்கு புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டதன் மீது கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 01 முதல் 06 ஆண்டுகள் வரை பராமரிக்கப்பட்டு விளைவற்று காணப்பட்டமை மற்றும் அந்த பொருட்களிற்கு வழங்கியுள்ள உத்தரவாத காலமும் பயன்படுத்தப்படாமல் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலைகளுக்கு உயர்த்துவது ஐக்கிய நாடுகள் சபையின் பொலிஸ் பிரிவு மற்றும் தொடர்புடைய ஏனைய பிரிவுகளுக்கும் இடையில் இடம்பெறும் ஒரு செயல்முறையாவதால், நீண்ட காலம் செல்வதும் குறித்த நிலைக்கு உயர்த்துவது மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலைகள் மற்றும் தொடர்புடைய பரிசோதனைகளை மேற்கொள்ளும் கால எல்லையை தீர்மானிப்பதும் ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

விஷேட அதிரடிப்படை அமைதி காக்கும் பொலிஸ் படையணி UN Peacekeeping Capability Readiness System (PCRS) நிலை 3 இற்கு உயர்த்தியுள்ளதாக 2024.04.29 ஐக்கிய நாடுகள் சபையின் பொலிஸ் பிரிவினால் எழுத்து மூலமாக அறிவிக்க ஒரு வருடத்திற்கும் அதிக காலம் கடந்துள்ளதுடன், அவ்வாறு காலம் கடத்துவது விஷேட அதிரடிப்படையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயம் ஒன்றென குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலின் பிரகாரம் அடுத்த நிலையான Rapid Deployemet Level (RDL) இற்கு உயர்த்தவுள்ளது Assessment of Operational Capability (AOC) மற்றும் Verification Visit (VV) மேற்கொள்ள ஐக்கிய நாடுகளின் சபையினை அறிவூட்டு நடவடிக்கைகள் ததற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் இந்த பரிசோதனைகளின் பின்னர் (PCRS) இன் இறுதி நிலையான Rapid Deployemet Level (RDL) நிலைக்கு உயர்த்த உள்ளதுடன், அந்த Rapid Deployemet Level (RDL) நிலைக்கு உயர்வு செய்யப்பட்ட திகதி முதல் கடமைக்கு செல்வதும் குறித்த நிலையில் தங்கியுள்ள காலத்திற்கு

| | | |
|---|---|---|
| காலாவதியாதல், உபகரணங்கள் விளைவற்று காணப்படுவதால் ஏற்படும் சேதம் தொடர்பான அபாயத்தை போன்றே ஒரு சில பொருட்கள் காலாவதியாகி உள்ளமை கணக்காவின் போது அவதானிக்கப்பட்டது. | கொள்வனவு செய்துள்ள முக்கிய உபகரணங்களின் பராமரிப்பு தொகையின் 25 தசவீத தொகையை ஐக்கிய நாடுகள் சபையினால் விஷேட அதிரடிப்படை அமைதி காக்கும் பொலிஸ் படைக்கு செலுத்தலும் இடம்பெறுவதாக அமைதி காக்கும் பணிகளிற்கான வழிகாட்டி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம் விஷேட அதிரடிப்படை அமைதி காக்கும் படையை ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளிற்கு அனுப்புவதற்கு தேவையான முன்நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் இக் கருதிட்டத்தின் பணிகள் செயலற்றுப் போகவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. | |

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரே வகையான பண்டங்களை ஒரே முறையில் விலைமனு கோரி பெற்றுக் கொள்ள இயலுமாக இருக்கையில் 20 சந்தர்ப்பங்களில் விலைமனு கோரி ஒரே நிறுவனத்திடமிருந்து ரூபா 3,321,832 தொகை செலவிட்டு பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தடன், முகாமிற்கு தேவையான 18 எரிவாயு அடுப்புகளை 10 சந்தர்ப்பங்களில் விலைமனு கோரி ஒரே நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்து ரூபா 618,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒரே முறையில் விலைமனு கோரி பணடங்களை கொள்வனவு செய்ய இயலுமாக இருக்கையில் பல தடவைகளில் விலைமனு கோரி பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | 2022/8/18 ஆம் திகதிக்கு முன்னர் வடகிழக்கு பிரதேசங்களில் நிறுவப்பட்ட முகாம்களுக்கு மட்டுமே உணவு சமைக்க எரிவாயு பயன்படுத்தப்பட்ட போதும் பின்னர் ஏனைய முகாம்களுக்கும் உணவு சமைக்க எரிவாயு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியினுள் குறித்த கொள்வனவை முடிவுறுத்த வேண்டியமையால், முகாம்கள் மட்டத்திலிருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் கொள்வனவு செய்ய ஆரம்பித்ததால் வெவ்வேறான பெறுகைகளாக விலைமனு கோரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் ஒரே வகையான பொருட்களை ஒரு பெறுகையாக விலைமனு கோரி மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுகைகள் செய்யும் போது கிரயம் குறையும் வகையில் உச்ச வினைத்திறனுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிய காலத்தில் மின் பட்டியல்களிற்கு பணம் செலுத்தாததால் நிலுவை மின் பட்டியல்கள் தொடர்பாக மிகை அறவீடாக ரூபா 210,901 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ITMIS தொகுதியின் மூலம் வவுச்சர்களை சமர்ப்பித்து முற்பணம் வழங்க முன்னர் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி திகதியில் சமர்ப்பிக்கப்படும் கையிலுள்ள பட்டியல் அறிக்கையின் பிரகாரம் முற்பணம் விடுவிக்கப்படுவதுடன், மாத இறுதித் திகதியளவில் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனில் முற்பணம் பெற்றுக் கொள்ள முடியாது போவதன் மீது பட்டியல்களிற்கு உரிய திகதிக்கு முன்னர் செலுத்த முடியாதுள்ளது. எதிர்காலத்தில் உரிய திகதிக்கு முன் செலுத்த இயலுமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | மாதாந்த மின்கட்டணத்தை உரிய திகதியில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு சொந்தமான மோடார் வாகனங்களிற்கு 2020 முதல் 2022 வரை வாயு பதனாக்கித் தொகுதி, பூச்சுப் பூசும் வேலைகள் உள்ளிட்ட ஏனைய குறைபாடுகளுக்கு ரூபா 3,381,239 தொகையும் 2023 ஆணடு ஜுன் வரை மாத்திரம் Suspension தொகுதி மற்றும் ஏனைய குறைபாடுகளுக்கு ரூபா 6,401,830 தொகையுமாக மொத்தம் ரூபா 9,783,069 திருத்த செலவுகள் செய்யப்பட்டிருந்தன. 2023 ஆம் ஆண்டில் அமைச்சு அலுவலகத்தின் 1301 - வாகனப் பராமரிப்பு செலவு விடய ஏற்பாட்டுத் தொகை ரூபா 5,000,000 ஆனதுடன், 03 செலவு விடயங்களினூடாக ரூபா 7,500,000 தொகை இந்த செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | WP CAT 7887 வாகனம் அமைச்சர் அவர்களின் பணிகளுக்காக ஈடுபடுத்தியுள்ளதுடன், அசைச்சின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பொருளாதார நெருக்கடி காரணமாக விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் போன்றே தாமதம் ஏற்படல். அமெரிக்க டொலரின் விலை அதிகரிப்பால் உதிரி பாகங்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளதால் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு செலவுகளும் அதிகரித்துள்ளன. எவ்வாறாயினும், அனைத்து பழுதுபார்ப்பு செலவுகளிற்கும் இயந்திர பொறியியல் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதால், அமைச்சர் அவர்கள் மற்றும் ஆளணியிளரிற்கு ஒதுக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் 10 ஆண்டுகளுக்கும் மேலானவை என்பதால், பராமரிப்பு செலவுகள் மற்றும் அத்தியாவசிய திருத்த செலவுகள் மிகவும் அதிகமாக உள்ளதுடன், நாடு முழுவதும் செலுத்த வேண்டியுள்ளதால் பருவகால சேவைகளும் அதிகரித்து வருகின்றன. அதனால் 2023 ஆம் ஆண்டின் ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாததுடன், சேமிப்பு எதிர்பார்க்கப்பட்ட செலவின | வாகன பராமரிப்பிற்கு முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |

விடயங்களினால் நி.பி. 66 மூலம் ஏற்பாடுகள பெறப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசு ஊழியர்களின் முற்பண “பீ” கணக்கில் அலுவலர்களின் மரணம், ஓய்வுபெறல், பணித்தடை செய்தல், வேலையிலிருந்து விலகுதல் மற்றும் ஏனைய காரணங்களால் தற்போது அமைச்சில் கடமையாற்றாத அலுவர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 அன்று அறவிட வேண்டிய ஓராண்டை விஞ்சிய நிலுவை கடன் மீதி கூட்டுத் தொகை ரூபா 646,979 ஆனதுடன், அவற்றில் 05 ஆண்டுகளுக்கு மேலாக பணித்தடை செய்யபட்ட மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 118,793 ஆன நிலுவை கடன் தொகை காணப்பட்டது. | அமைச்சின் 2023.12.31 திகதியன்று ஓராண்டை விஞ்சிய கடன் நிலுவைத் தொகை ரூபா 216,659 ஆவதுடன், அந்த அலுவலர் ஓய்வுக்கு முந்திய விடுப்புக்கு விண்ணப்பித்துள்ள போதும், அங்கீகரிக்கப்படவில்லை என்பதுடன். மீண்டும் கடமைக்கு அறிக்கையிடவில்லை. கடனை அறவிட அலுவலரிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளதுடன், இதுவரை பணத்தை செலுத்தவில்லை. சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்காலத்தில் முயற்சிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலுவையில் நிலுவை கடன் மீதிகளை விரைவில் அறவிட முறையான திட்டமொன்றை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புச் சட்டத்தின் 9 (ஈ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொறு வருடமும் கீழானவர்களை் ஒரு முறையாவது உரிய முறையில் அரசு சார்பற்ற அமைப்பின் கணக்குகளை கணக்காய்வு செய்ய வேண்டிய போதும், அரசு சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பாக தேசிய செயலகத்தின் கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் செயல்படும் நிலையிலுள்ள 691 அரச சார்பற்ற அமைப்புக்களில் 54 நிறுவனங்களின் மாத்திரமே கணக்காய்வு செய்யப்பட்ட நிதியறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புச் சட்டத்தின் பிரிவு 9 (ஈ) பிரகாரம் வருடத்திற்கு ஒரு முறை கீழானவர்களை உரிய முறையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு பதிவாளரின் அதிகார்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் நிதி அறிக்கைகளை வழங்காத நிறுவனங்களிடமிருந்து அந்த அறிக்கைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டளவில் 2022 ஆம் ஆண்டிற்குரியதாக கணக்காய்வு | 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை அமைப்புச் சட்டத்தின் 9 (ஈ) பிரிவின் பிரகாரம நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை 70 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் காலாண்டிற்கு ஒன்று வீதம் ஒவ்வொரு மாவட்டத்திலும் 04 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். அது பணிப்பாளர் நாயத்தின் அல்லது மாவட்டச் செயலாளர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலரால் நடத்தப்படுவதுடன், அந்தக் கூட்டத்தில் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை அனுப்புவது குறித்து அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக தொடர்ச்சியாக 03 வருடங்களாக அறிக்கைகளை சமர்ப்பிக்காத நிறுவனங்கள் செயலற்ற நிறுவனங்களாக குறிப்பிடப்படுவதுடன், அதன் பிரகாரம் எமது இணையத்தளத்தில் செயற்படும் நிறுவனங்களின் பட்டியலொன்று குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **(அ) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு** | | |
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரில் 13 சதவிகிதம் வெற்றிடமாக காணப்படுவது அமைச்சின் செயற்பாடுகளை நடாத்திச் செல்ல தடையாக இருந்ததுடன், மேற்படி வெற்றிடங்களினுள் மேலதிக செயலாளர், பணிப்பாளர் (இ.பொ.சே), பணிப்பாளர் (திட்டமிடல்), உதவிச் செயலாளர் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய சிரேஷ்ட நிலை பதவிகளும் உள்ளடங்குகின்றன. | 2023.12.31 திகதிக்குள் வெற்றிடமாக உள்ள அனைத்து சிரேஷ்ட நிலை பதவிகளையும் நிரப்ப தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## (ஆ) விஷேட அதிரடிப்படை

### i சீருடை ஆளணியினர்

| | | |
|---|---|---|
| • பிரதி பொலிஸ் மா அதிபர், பெண் பொலிஸ் பரிசோதகர், தலைமை சார்ஜென்ட் மற்றும் தலைமை சார்ஜென்ட் சாரதி ஆகிய பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கையான 54 அளவில் 100 வீதம் பெற்றிடமாக இருந்தது. | பிரதி பொலிஸ் மா அதிபர் 02 பதவிகளுக்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகுதியான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் விஷேட அதிரடிப்படையிற்கு இணைக்கப்பட்டு இல்லாததால், சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் கடமையாற்றுவதற்காக இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்ப போதிய முயற்சி எடுக்க வேண்டும். |
| • உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவியின் அங்கீகார எண்ணிக்கை 44 ஆன போதும், 21 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது சதவீதமாக 48 தசவீதமானது. | பெண் பொலிஸ் பரிசோதகர், தலைமை சார்ஜென்ட் மற்றும் தலைமை சார்ஜென்ட் சாரதி ஆகிய பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தின் பிரகாரம் இலங்கை பொலிஸ் மற்றும் விஷேட அதிரடிப்படை அலுவலர்களிற்கு பதவி உயர்வு வழங்கும் முதல சந்தர்ப்பத்திலேயே நிரப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விஷேட அதிரடிப்படை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப பதவி உயர்வு பரிசோதணை சபையொன்றை நடாத்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ள பொலிஸ மா அதிபரிற்கு அனுப்பப்பட்டு | வெற்றிடங்களை நிரப்ப போதிய முயற்சி எடுக்க வேண்டும். |
| • பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியின் அங்கீகார எண்ணிக்கை 6999 ஆன போதும், 2959 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது சதவீதமாக 42 தசவீதமானது. | கோரிக்கை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள போதும், இது வரை அதற்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப போதிய முயற்சி எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| • பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியின் அங்கீகார எண்ணிக்கை 163 ஆன போதும், 86 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது சதவீதமாக 53 தசவீதமானது. | நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நிரப்ப வேண்டிய பயிற்சி பொலிஸ் பரிசோதகர் பயிற்சி பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பயிற்சி பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ள அங்கீகாரம் கோரி பொலிஸ் மா அதிபரிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப போதிய முயற்சி எடுக்க வேண்டும். |
| • பெண் பிரதான பொலிஸ் பரிசோதகர் 03 அலுவர்களும், பொலிஸ் பரிசோதகர் 80 அலுவர்களும், உதவி பொலிஸ் பரிசோதகர் (போக்கு வரத்து) 03 அலுவர்களும், பொலிஸ் சார்ஜென்ட் 428 அலுவலர்களும் மற்றும் பொலிஸ் சார்ஜென்ட் சாரதி 32 அலுவலர்களும் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அரச சேவையில் ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், புதிய ஆட்சேர்ப்புக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. நிலவுகின்ற கடுமையான அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக ஒதுக்கப்பட்ட கடமைகளை ஈடுசெய்யும் வகையில் புதிய ஆட்சேர்ப்புகளை விலைவில் மேற்கொள்ள வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. | மேலதிக ஊழியர்களை குறித்த அங்கீகார எல்லை திருத்தத்திற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**ii. சிவில் ஆளணியினர்**

| | | |
|---|---|---|
| விஷேட அதிரடிப்படையில் இணைக்கப்பட்டுள்ள சிவில் சேவை ஆளணியினரில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 709 ஆன போதும், 182 வெற்றிடங்கள் காணப்படுவதுடன், அதாவது அது சதவீதமாக 26 ஆகும். | முகாமைத்துவ உதவியாளர் (இரண்டாம் நிலை) வெற்றிடங்கள் தொடர்பாக பணிப்பாளரிற்கு (சிவில் நிருவாகம்) தொடர்ந்து அறிக்கை செய்வதுடன், மேலும் 2024.01.23 திகதி கட்டளை அதிகாரி அவர்களினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களிற்கும் அறிக்கை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப போதிய முயற்சி எடுக்க வேண்டும். |